WORDSMITH LEARNING HUB PTE LTD

# Sec 3

## NORMAL ACADEMIC SECONDARY

# TAMIL

## சாதாரண நிலை உயர்நிலை பள்ளி

UNAUTHORISED COPYING PROHIBITED

**SEC 3 - NA EXAM REVISION WORKSHEETS (PAPER 2)**
**உயர்நிலை 3 - சாதாரண நிலை தேர்வுப் பயிற்சித்தாள் (தாள் 2)**

# பொருளடக்கம்


| எண் | பொருள் | பக்கம் |
|---|---|---|
| 1 | தேர்வுத்தாள் 1 | 1 - 10 |
| 2 | தேர்வுத்தாள் 2 | 11 - 20 |
| 3 | தேர்வுத்தாள் 3 | 21 - 30 |
| 4 | தேர்வுத்தாள் 4 | 31 - 40 |
| 5 | தேர்வுத்தாள் 5 | 41 - 50 |
| 6 | தேர்வுத்தாள் 6 | 51 - 60 |
| 7 | தேர்வுத்தாள் 7 | 61 - 70 |
| 8 | தேர்வுத்தாள் 8 | 71 - 80 |
| 9 | தேர்வுத்தாள் 9 | 81 - 90 |
| 10 | தேர்வுத்தாள் 10 | 91 - 100 |
| 11 | தேர்வுத்தாள் 11 | 101 - 110 |
| 12 | தேர்வுத்தாள் 12 | 111 - 120 |
| 13 | அருஞ்சொற்கள் (தேர்வுத்தாள் 1 to 12) | 121 - 129 |
| 14 | விடைத்தாள் | 130 - 150 |

# தேர்வுத்தாள் 1

| |
|---|
| / 70 |

**'அ' பிரிவு**

**A1 மரபுத்தொடர்களும், இணைமொழிகளும் (10 மதிப்பெண்கள்)**

**கீழ்க்காணும் வாக்கியங்களில் கோடிட்ட இடங்களை நிரப்புவதற்கேற்ற சொற்றொடர்கள் அடியில் கொடுக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு கோடிட்ட இடத்தையும் நிரப்புவதற்கேற்ற மிகப் பொருத்தமான சொற்றொடரைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

Q1 ஆபத்து வேளைகளில் ________________________ முடிவெடுக்காமல் நிதானமாகச் சிந்தித்துச் செயல்படுவது மிகவும் அவசியமாகும்.

Q2 பாரிவள்ளல், இல்லை என வருபவர்களுக்கு ___________________________ உதவும் கொடை வள்ளலாகத் திகழ்ந்தவர்.

Q3 தனக்குப் கொடுக்கப்பட்ட பணியை _____________________________ உடனுக்குடன் செய்து முடித்து துருதுருவென செயல்படும் குணம் கொண்டவன் மாறன்.

Q4 உண்மை நிலவரத்தை அறிந்து கொள்ள **பிரதிவாதி**யைப் பல குறுக்குக் கேள்விகளைக் கேட்டு _________________________ வழக்கறிஞர்.

Q5 இவ்வருட பிறந்தநாள் பரிசாக தான் பல நாள் கேட்ட மடிக்கணினியை அம்மா நிச்சயமாக வாங்கி தந்துவிடுவார் என கண்ணன் _______________________ கட்டினான்.

| | |
|---|---|
| (A) ஆறப்போடாமல் | (B) ஆழம் பார்த்தார் |
| (C) வலைவீசினார் | (D) இரண்டுபடாமல் |
| (E) அள்ளியிறைத்து | (F) அவசரக்குடுக்கையாக |
| (G) அள்ளிக் கொடுத்து | (H) சிட்டாய்ப் பறந்து |
| (I) ஏட்டிக்குப் போட்டி | (J) மனக்கோட்டை |

**A2 முன்னுணர்வு கருத்தறிதல் (10 மதிப்பெண்கள்)**

**கீழ்வரும் பகுதியில் கோடிட்ட இடங்களை நிரப்புவதற்கேற்ற அமைப்புச் சொற்கள் பகுதியின் அடியில் கொடுக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு கோடிட்ட இடத்தையும் நிரப்புவதற்கேற்ற மிகப்பொருத்தமான சொல்லைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

இந்த உலகில் உள்ள **மேதை** அனைவரும் வாழ்க்கையில் சாதிக்க வாசிப்பு பெரும் பங்கு வகித்ததாகக் அவர்கள் கூறுவார்கள். வாசிப்பு ஒரு மனிதனுக்கு முழுமையான அறிவை Q6. ______________________ என்றால் அது மிகையாகாது. இத்தகைய சிறப்பு வாய்ந்த வாசிப்புப் பழக்கமானது மக்களிடையே **அருகி** வருகிறது. புதிய தகவல்களைக் கற்று அறிவை வளர்த்துக் கொள்ளவும், பரந்த உலக அறிவைப் பெற்றுக்கொள்ளவும் Q7. ________________________ அமையும் வாசிப்புப் பழக்கத்தை நமது அன்றாடப் பழக்கமாக்கி கொள்வது அவசியம். பொதுவாகப், பள்ளி மற்றும் கல்லூரியில் படிப்பவர்கள் பாடப்புத்தகங்களைப் படிப்பதையே வாசிப்பு என்று Q8. ______________________ நினைக்கின்றனர். தரமான புத்தகங்களைத் தேடிச் சென்று வாசிப்பதால் நமது அறிவாற்றலைப் பல மடங்காக Q9. _______________________ கொள்ளலாம். மாணவர்களுக்கான பொதுத் தேர்வுகளும் போட்டிகளும் கூட பாடப் புத்தகங்களைத் தாண்டிய வாசிப்பின் Q10. ___________________________ உணர்த்துகின்றன. எனவே, இன்று முதல் வாசிப்பை உயிர் மூச்சாகக் கருதி செயல்படுவோம்!


| | |
|---|---|
| (A) தேவையை | (B) தவறாக |
| (C) உறுதுணையாக | (D) வழங்குகிறது |
| (E) வளர்க்கிறது | (F) ஏற்புடையதாக |
| (G) சரியாக | (H) உயர்த்தி |
| (I) பெருக்கி | (J) முக்கியத்துவத்தை |

**‘ஆ’ பிரிவு**

**B3 தெரிவுவிடைக் கருத்தறிதல் (10 மதிப்பெண்கள்)**

**பின்வரும் கட்டுரைப் பகுதிகளைக் கருத்தூன்றிப் படித்து, அவற்றின் அடியில் காணும் வினாக்களுக்கு விடை எழுதவும். வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் நான்கு தெரிவுகள் கொடுக்கப்பட்டுள்ளன. அவற்றுள் மிகப் பொருத்தமான விடையைத் தேர்ந்தெடுத்து அதன் எண்ணை மட்டும் விடைத்தாளில் எழுதவும்.**

**பகுதி 1**



தற்போதைய கலையுலகம் பல புதுமைகளைப் படைத்து இருக்கின்றது. அதன் அடிப்படையில், கலை வேறு இயந்திரம் வேறு என்ற நிலையைத் தாண்டி அறிவியல் சாதனங்களைப் பயன்படுத்தி கலைத்துவத்தை வெளிப்படுத்தலாம் என்பது இக்காலத் திரைப்படங்கள் மூலம் நமக்கு தெரிவிக்கின்றன.

தற்காலத்தில் வெளிவரும் பெரும்பாலான திரைப்படங்கள் வாசகர்களின் பொது அறிவைப் பெருகச் செய்கின்றன. எளிய மக்களுக்குத் தங்கள் ஊரைக் கடந்த வேற்றுமொழி, வெளிநாடுகளின் அமைப்பு, **ஊர்தி**களின் வகைகள், சமுதாய நிலை போன்றவற்றைத் தெரிந்துகொள்ள நல்ல வாய்ப்பாக திரைப்படங்கள் அமைகின்றன. பல்வேறு குடும்ப அமைப்புகள், பணத்தின் மதிப்பு, மக்களின் **மனோநிலை**, வாழ்க்கைத்தரம், உடை, அலங்காரம், கலாசாரம் என எல்லாக் கோணங்களிலும் ஓர் அடிப்படையான அறிமுகமும், விளக்கமும் தற்காலத் திரைப்படங்களைப் பார்க்கும் வாசகர்களுக்குக் கிடைக்கின்றன. ஆகவே, திரைப்படங்கள் மனமகிழ்வுக்கு மட்டுமில்லாமல் பல்வேறு **கோணங்களில்** நன்மையைக் கொடுக்கும் பெரிய பங்கையும் சிறப்பாக ஆற்றி வருகின்றன.

Q16 இக்காலத் திரைப்படங்கள் நமக்கு என்ன தெரிவிக்கின்றன?

1. பொது அறிவைப் பெருக வழிவகுக்க வேண்டும் என்பதை
2. அறிவியல் சாதனங்கள் வழி கலைத்துவத்தை வெளிப்படுத்தலாம் என்பதை
3. தொழில்நுட்ப கருவிகளின் தேவை இல்லை என்பதை
4. கலை வேறு இயந்திரம் வேறு என்பதை ( )

Q17 தற்காலத்தில் வெளிவரும் திரைப்படங்கள் எவ்வாறு வாசகர்களின் பொது அறிவைப் பெருகச் செய்கின்றன?

1. எளிய மக்களின் மனோநிலையை விளக்குவதன் வாயிலாக
2. பல மக்களின் கலாசாரத்தைத் தெரிவிப்பதன் வாயிலாக
3. எல்லா கோணங்களிலும் பல நன்மையை அள்ளி தருவதன் வாயிலாக
4. அடிப்படை விளக்கமும் அறிமுகமும் வழங்குவதன் வாயிலாக ( )

**பகுதி 2**




மத **போதனை** நூல்களுக்கு அப்பாற்பட்டு ஒரு மனிதன் மனிதனாக வாழ வழிகாட்டும் **உலகமறை**தான் திருக்குறள். பல மொழி பேசுபவர்களுக்கும் பொருந்துகின்ற வாழ்க்கைப் பாடத்தை கற்றுக்கொடுப்பதைப் பொருட்டு, சுமார் 80 மொழிகளில் இந்நூல் மொழிபெயர்க்கப்பட்டது. உலக மக்களால் போற்றப்படுகின்ற இந்த உலக பொதுமறையைத் திருவள்ளுவர் கி.மு. 2ஆம் நூற்றாண்டுக்கும் கி.பி. 5ஆம் நூற்றாண்டுக்கும் இடைப்பட்ட காலக்கட்டத்தில் எழுதியுள்ளார்.

பல வாழ்க்கை போதனைகளை வழங்கும் நெறிநூலான திருக்குறளை **வாழ்வியல்** இலக்கியமாகக் கருதுவோரும் உண்டு. மேலும், இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு **முற்பட்ட** மனிதனுக்காக மட்டுமல்லாமல், இருபத்தோராம் நூற்றாண்டின் புதிய தலைமுறையினருக்கும் வழிகாட்டும் **புரட்சிகரமான** நூல் திருக்குறளாகும். திருக்குறள்களின் **பொருண்மை**, காலங்கள் கடந்தும் புதிய புதிய விளக்கங்களைத் தந்து, இனம், மொழி, நாடு எனும் எல்லைகளைத் **தகர்த்தெறிந்து** மனித வாழ்க்கையை மேலும் வளப்படுத்துகிறது.

தொழில்நுட்பத்தின் உதவியால் பல **மென்பொறியாளர்**கள் பற்பல இலவச **மின்னியல்** திருக்குறள் பதிவுகளை இணையத்தில் பதிவேற்றுகிறார்கள். உலக மக்களின் நல்வாழ்க்கைக்காகப் படைக்கப்பட்ட இந்த அரிய **களஞ்சியத்தின்** சிந்தனைகளைத் தற்கால தலைமுறையினருக்கும் இனி வரப்போகின்ற தலைமுறைக்கும் எடுத்துரைக்க வழி செய்ய வேண்டும். அதனால்தான், பல பொது இடங்களிலும் பள்ளிகளிலும் திருக்குறள் போதனை வகுப்புகள் நடந்த வண்ணமாகவே இருக்கின்றன.

Q18 திருக்குறள் ஏன் 80 மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டது?

1. வாழ்க்கைப் பாடங்களைப் பிற மொழி பேசுபவர்களுக்கும் எடுத்துக்கூற
2. தமிழர்களுக்குத் திருக்குறள் உலக பொதுமறையாகத் திகழ்வதனால்
3. மத போதனையைக் கொண்டிருக்காததால்
4. ஒரு மனிதன் மனிதனாக வாழ வழிகாட்டுவதால் ( )

Q19 தலைமுறை தாண்டியும் திருக்குறள் எவ்வாறு புரட்சிகரமான நூலாகத் திகழ்கின்றது?

1. மனிதனின் வாழ்க்கையை மேலும் வலுப்படுத்துவதினால்
2. பல வரம்புகளைத் தகர்த்தெறிந்து புது புது விளக்கங்களைத் தருவதினால்
3. பல வாழ்க்கை போதனைகளை வழங்குவதால்
4. நெறிநூலான திருக்குறள் வாழ்வியல் இலக்கியமாக மாறுவதினால் ( )

Q20 இளம் தலைமுறையினருக்குத் திருக்குறளின் சிந்தனைகள் எப்படி புகட்டப்படுகின்றது?

1. இலவச திருக்குறள் மென்பொருள் உருவாக்கப்பட்டதன் வழி
2. இணையத்தில் மலிவான விலையில் பதிவுகள் இடம்பெறுவதன் வழி
3. திருக்குறள் போதனை வகுப்புகள் பல இடங்களில் நடத்தப்படுவதன் வழி
4. உலக மக்களால் திருக்குறள் அரிய களஞ்சியமாகக் கருதப்படுவதன் வழி

( )

**B4 பிழை திருத்தம் (10 மதிப்பெண்கள்)**

**கீழ்க்காணும் பகுதியின் இடப்பக்கத்தில் ஐந்து வினாக்களின் எண்கள் இடம்பெற்றுள்ளன. ஒவ்வொரு வினாவிற்கும் எதிரிலுள்ள வரியில் ஒரு பிழையான சொல் உள்ளது. அந்த ஐந்து வரிகளிலும் உள்ள பிழையான சொற்களைத் திருத்தி சரியான சொற்களை எழுதவும்.**

| | |
|---|---|
| | துறைகள் பல இவ்வுலகில் உள்ளன. அவற்றுள் விஞ்ஞானத்துறை இன்று மிகச் |
| Q16 | சிறந்ததாகக் கருதப்படுகிறது. இத்துரையில் ஈடுபட்டுள்ளவர்களே விஞ்ஞானிகள். |
| | அவர்கள் சாதாரணமாகத் தோன்றும் பொருள்களில் கூட புதுமை காண்பவர்கள். |
| | புதுமைகளுக்கு என்றும் பற்றாக்குறை கிடையாது. விஞ்ஞானிகள் தொடர்ந்து |
| Q17 | புதுமைகளைக் கண்டுபிடித்துக் கொண்டிருக்கின்றன. பாரமானி, நுண்ணோக்கி, |
| | தொலைநோக்காடி ஆகிய கருவிகளையும் மற்றும் மனிதச் சமுதாயத்திற்கு உதவக்கூடிய |
| | எத்தனையோ கருவிகளையும் விஞ்ஞானிகள் கண்டு பிடித்திருக்கின்றனர். இன்னும் |
| | கண்டுபிடித்துக் கொண்டிருக்கின்றனர். இன்று விஞ்ஞானத்துறையில் முன்னேறியுள்ள |
| Q18 | நாடே முற்போக்கானவை எனக் கருதப்படுகின்றன. இயற்கை இன்னும் நிறையப் |
| | புதுமைகளை மறைத்து வைத்துக்கொண்டிருக்கிறது. நோய்கள் பெருகியுள்ள இன்றைய |
| Q19 | உலகினுடைய இன்னும் புதுமையான மருந்து வகைகள் தேவைப்பட்டன. எனவே |
| | விஞ்ஞானிகள் இன்னும் கண்டுபிடிக்க வேண்டிய புதுமைகளுக்கு நாம் வரையறை |
| | கூறமுடியாது. புதியன கண்டுபிடிப்பதற்கு அவர்களை நாம் ஊக்குவிக்க வேண்டும். |
| | அரசும் சமுதாயமும் விஞ்ஞானிகளை நன்முறையில் பயன்படுத்த வேண்டும். அவர்களது |
| | பணி சிறக்க ஆதரவு நல்க வேண்டும். அறிவியல் ஆர்வத்தைப் பள்ளி மாணவர்களிடம் |
| Q20 | ஏற்படுத்த வேண்டும். அது மூலம் வருங்காலத்தில் அதிக எண்ணிக்கையில் |
| | விஞ்ஞானிகள் உருவாக வழிவகுக்க வேண்டும். ஆகவே, நிறைய விஞ்ஞானிகள் |
| | மூலம் நிறைய கண்டுபிடிப்புகள் இவ்வுலகில் உருவாக வேண்டும். |

Q16 ______________________________

Q17 ______________________________

Q18 ______________________________

Q19 ______________________________

Q20 ______________________________

**‘இ’ பிரிவு**

**C5 சுயவிடைக் கருத்தறிதல் (30 மதிப்பெண்கள்)**

**பின்வரும் பகுதியைக் கருத்தூன்றிப் படித்து அதையொட்டிய வினாக்களுக்கு உம் சொந்த நடையில் விடை தருக.**

அன்புள்ள சரண்,

நேற்று உன் மின்னஞ்சல் கிடைத்ததில் நான் அளவில்லாத மகிழ்ச்சி அடைந்தேன். உன் கடந்த மின்னஞ்சலில் சிறுவர்களுக்கு மிகவும் பிடித்தமான வால்ட் டிஸ்னியைப் பற்றி பல சுவாரஸ்சியமான தகவல்களைப் பகிர்ந்திருந்தாய். வால்ட் டிஸ்னியின் **கைவண்ணத்தில்** உருவான மிக்கி மவுஸ் கதாப்பாத்திரமே எனக்கு விருப்பமான கதாப்பாத்திரம். இது ஒரு கற்பனை கதாப்பாத்திரமாக இருந்தாலும் பெரியவர்களையும் குழந்தைகளாய் மாற்றி அவர்களைச் சிரிக்க வைத்தது. என் பாட்டியும் என்னுடன் இந்த நிகழ்ச்சியைப் பார்ப்பார் தெரியுமா? மேலும், என் **மனச்சோர்வை**யும் இது குறைத்தது என்றுதான் கூற வேண்டும்.

வால்ட் டிஸ்னி அவர்களைப் பற்றி நீ மின்னஞ்சலில் தெரிவித்த தகவல் எனக்கு வியப்பாக இருந்தது, சரண். வால்ட் டிஸ்னி இதுவரை 26 முறை ஆஸ்காரை வென்றுள்ளாரா? ஆஸ்காருக்காக அதிக முறை **பரிந்துரைக்க**ப்பட்டவரும், அதிக முறை வென்றவரும் இவரே ஆவார் எனும் தகவலை என் பாட்டியுடனும் பகிர்ந்து கொண்டேன். ஒரு மனிதன் எப்படி இத்தனை விருதுகளை வென்று குவிக்க முடியும்? இவற்றோடு இன்னும் பல விருதுகளையும் வென்றுள்ளார் என்றும் கூறியிருந்தாய்.

கடந்த வாரம் பள்ளி ஓவியப்போட்டியில் பரிசு வெல்லாததை எண்ணி வருத்தத்தில் இருந்தேன் அல்லவா? நீயும் மனம் தளராதே என்று என்னை சமாதானம் செய்தாய். டிஸ்னியின் உண்மை கதை என் தவற்றை உணர வைத்துள்ளது. டிஸ்னி தொடங்கிய தொழில் தோல்வியிலேயே முடிந்தது. பின் விளம்பரப் படங்கள் எடுக்கும் நிறுவனம் ஒன்றில் சேர்ந்து பணியாற்ற தொடங்கினார். அதிலும் தோல்வி கண்டு மனம் தளராத டிஸ்னி அவர் தயாரித்த ‘Alice’s Comedies’-ஐ வெளியிட்டார். அதிலிருந்து சொந்த கேலிச் சித்திர படங்களைத் தயாரித்தாராம்.

மிக்கி மவுஸ் கதாப்பாத்திரத்திடமிருந்து எனக்கு மிகவும் பிடித்தது அது தனது நண்பர்களுடன் நல்ல நட்புறவை ஏற்படுத்தியதுதான். இது சிறுவர்களிடையே நட்புறவாடுதலின் அவசியத்தைக் கற்றுத்தந்துள்ளது. வெவ்வேறான உயிரின வகையாக இருந்தாலும் ‘மிக்கி மவுஸ்’ தன் நண்பர்களுடன் ஒற்றுமையாக இருப்பது, இரசிகர்களிடையே **மனிதத்தன்மை**யை வளர்த்துள்ளது என்று கூறலாம்.

நண்பா, டிஸ்னியின் வெற்றிகளுக்கான காரணம் அவரது விடாமுயற்சியும் உழைப்பும்தான் என்பதை நீ ஒப்புக்கொள்கிறாய்தானே? நேரத்தைப் பொன் போன்று மதித்து அவற்றைச் சரியாகப் பயன்படுத்திக்கொள்ளும் உத்திமுறைகளையும் அறிந்து வைத்திருந்தார். நம்மைப்போல கலைத்துறையில் **சாதிக்க** எண்ணுபவர்கள் இவரை **முன்னுதாரணமாகக்** கொண்டிருக்கலாம். பள்ளி விடுமுறை முடிந்து உன்னை பள்ளியில் சந்திக்கிறேன், சரண்.

இப்படிக்கு குமார்.

**வினாக்கள்**

Q21 ஏன் குமாருக்கு மிக்கி மவுஸ் கதாப்பாத்திரத்தைப் பிடிக்கும்? (5 மதிப்பெண்கள்)

______________________________________________________________________

______________________________________________________________________

______________________________________________________________________

______________________________________________________________________

______________________________________________________________________

Q22 பனுவலை அடிப்படையாகக் கொண்டு பின்வரும் வாக்கியங்கள் ஒவ்வொன்றும் சரியா தவறா என்று எழுதவும். பின்னர், உன் விடைக்குரிய காரணத்தையும் எழுதவும். (5 மதிப்பெண்கள்)

| வாக்கியம் | சரி/தவறு | காரணம் |
|---|---|---|
| சரண் குமாருக்கு வால்ட் டிஸ்னி வென்றுள்ள விருதுகளைப் பற்றி தெரிவித்திருந்தான். | (A) | (B) |
| வால்ட் டிஸ்னி மொத்தம் 26 விருதுகளை வென்றுள்ளார். | (C) | (D) |

Q23 டிஸ்னியின் உண்மை கதையிலிருந்து குமார் கற்றுக்கொண்ட பாடம் என்ன ? (5 மதிப்பெண்கள்)

__________________________________________________________

__________________________________________________________

__________________________________________________________

__________________________________________________________

Q24 மிக்கி மவுஸ் கதாப்பாத்திரத்திலிருந்து வெளிப்படும் விழுமியங்கள் யாவை ? அவை சிறுவர்களிடையே என்னென்ன தாக்கத்தை ஏற்படுத்தின ? (6 மதிப்பெண்கள்)

| **விழுமியம்** | **ஏற்படுத்திய தாக்கம்** |
|---|---|
| (A) | (B) |
| (C) | (D) |

Q25 குமார் வால்ட் டிஸ்னியை முன்னுதாரணமாகக் கொள்ளலாம் என்று கூறக் காரணம் என்ன? (6 மதிப்பெண்கள்)

__________________________________________________________

__________________________________________________________

__________________________________________________________

__________________________________________________________

__________________________________________________________

Q26 பத்தி 2-இல் 'ஆச்சிரியமாக' என்னும் பொருளை உணர்த்தும் சொல்லைக் கண்டறிந்து எழுதவும். (1 மதிப்பெண்)

____________________________________

Q27 பத்தி 4-இல் மிக்கி மவுஸ் தன் நண்பர்களுடன் ஒன்றாக இருந்து செயல்படுவதை எந்தச் சொல் உணர்த்துகிறது என்பதைக் கண்டறிந்து எழுதவும். (1 மதிப்பெண்)

____________________________________

பின்வரும் சொற்கள் பனுவலில் இடம்பெற்றுள்ளன. அவை உணர்த்தும் பொருளை எழுதவும். (1 மதிப்பெண்கள்)

Q28 சாதிக்க - ____________________________________